
வாருண மான்மியம்

(வசனம்)



பரங்கிப்பேட்டை என்னும்
முத்துக்கிருஷ்ணபுரி, அகரம்
தல வரலாறு.

தேவஸ்தான வெளியீடு
விலை அணா 4.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

வாருணை மான்மியம்

(வசனம்)

இது

திருச்சிற்றம்பல முடையா ரடிமைத் திருச்சீர்த்தோடைக் கிழாஅன்

பறங்கிப்பேட்டை

அல்லான் முத்துத்தாண்டவராய பிள்ளையவர்கள்

இயற்றியது.

இதனை

14—9—53 இல் நடைபெற்ற

பறங்கிப்பேட்டை அகரம்

ஸ்ரீ ஆதிமூலசுவாமி கோயில் கும்பாபிஷேக

நினைவு மலராகத்

தேவாலய பரிபாலர்கள்

உயர்திரு. V. கிருஷ்ணசாமி படையாட்சி M. A., M. L. A.,

,, V. அரங்கசாமிப் பத்தர்,

,, S. ஆதிமூல செட்டியார்,

இவர்களால்

பறங்கிப்பேட்டை

அமிர்த விலாஸ அச்சகத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

—

1953



"குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க."

உ
சிவமயம்,
திருச்சிற்றம்பலம்.

வாருண மான்மிய முன்னுரை.

"மூர்த்தி தலந்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கு
வார்த்தை சொல்லும்சற்குரு வாய்க்கும் பராபரமே."

இவ்வாப்த மொழிக்கிலகி யொளிர்வது பறங்கிப்பேட்டை அகரம் ஸ்ரீ ஆதிமூலேச்வரமேயாகும். இதன் பிரபாவம் உரைப்பது வாருண மான்மியம் என்பது. ஆகவே இது "தில்லைமூலட்டானனே திருவாருண மமர்ந்தான்" என்றபடி இந்தப் பெரிய கோயில் வைபவத்தைப் புகழ்ந்து கூறுவ தொருநூல்.

இதன் வடமொழிப் புராணங்கள் இரண்டையும் தச்சக்காடு பிரமஸ்ரீ பிரபாகர சாஸ்திரி சுவாமிகள் மொழிபெயர்த் தருளியபடி எனதருட்குருவாம் அண்ணன் அவர்கள் "ஓம் ஸ்ரீகுரவே நம:, ஸ்ரீகண பதேய நம:, சிவாய நம: என்று தொடங்கி மொழிபெயர்த்தருளிய சிவாஷ்டோத்திர ஸஹஸ்ர நாமங்கள் இனிது நிறைவேறின" என்று 1008-திருவிருத்தங்களாக நன்கு முடித்துள்ளார்கள்.

இது 1901-ம் ஆண்டு நடைபெற்ற இக்கோயில் கும்பாபிஷேக காலத்தில் தேவகோட்டை செல்வ ஸ்ரீமான் ராம. வயி. இராமசாமிச் செட்டியார் அவர்கள் காருணிய திரவியோபகாரத்தால் இதன் தருமகர்த் தர்களான உயர்திருவாளர்கள் தா. சு. மு. வே. முத்துக்குமார முதலியார் பெ. தி. ஆதிமூல செட்டியார் இவர்களால் அச்சிடுவிக்கப் பெற்று வழங்கி லாயிற்று. இது பதினாறு படலங்களை யுடையது.

இந் நூலுட்கண்ட முறையே பலசித்தி வல்லபங்களும், க்ஷேத்திர மேன்மையு மிரகசியத் தானங்களும் இன்றும் என்றும் காணக்கிடப்ப தால் இதனை யாவருமறியக் கருதிப் பிரசுரித்தனன்.

சிதம்பர புராணத்திலும் புலியூர் வெண்பாவிலும் இத்தலத்தைத் தில்லைக் கமிச க்ஷேத்திரமாகக் கூறுதலில் திருஞானசம்பந்த சுவாமிகள் முதலாயினோர் பாடியருளிய திருப்பாசுரங்களே யிதற்குந் திருப்பதிகங் களாமெனக் கொள்க. இக்கருத்துப் பற்றியே ஆசிரியப் பெருந்தகை யவர்களும் **"தில்லை வாருணத்தான்"** எனத் துதிகவிகளுள் தோத்தரிக் கின்றார்கள்.

இக் கோயிலை வட மொழியிற் பிரமதந்தனும், தென்மொழியில் பூதன் நாகன், தில்லைவிடங்கன் ஸ்ரீ மாரிமுத்துப் பிள்ளை, குன்றத்தூர் அட்டாவதானி சொக்கப்ப நாவலர், மாயூரம் சாமிநாத கவிராயர் முதலிய கவிசரபங்களும் பாடிப் பேறு பெற்றிருக்கின்றனர்.

இத்திறப் பெற்றித்தாய இக்கறு நூலின் பத்தியப் பாக்கள் முழுவதும் 14—9—53-ல் நடைபெறும் இப்பெருஞ்சாந்திவிழா சமீபத்துள்ள கால அளவில் அச்சிடுவிக்க முடியாதிருப்பினும் இவ்வுரைநடை ரூபத்தையேனும் நினைவு மலராக வழங்கிய இப்பெரிய கோயில் தருமகர்த்தர்களுக்கும் மற்றைய எல்லாச் சைவாபிமானிகளுக்கும் எல்லாம்வல்ல ஸ்ரீ அமிர்தவல்லி சமேத ஆதிமூல சுவாமி நீண்ட ஆயுள் ஆரோக்கியங்களைப் பெருகத் தந்து தண்கருணை பாலித்தருள்வாராக. சுபம்.

"வாருணமான் மியமிதனை வகுத்தெழிதி வைப்போரும்
பாரணஞ்செய் திடுவோரும் படிப்போருங் கேட்போருந்
தாரணியிற் பூசித்துத் தகைமைபெற வாழ்வோரும்
பாரிணங்கு மனைமக்கள் பாக்கியஞ்சீர் பெறுபவரே"

ஆதி மூலமென்—றோதி வாழுநர்
சோதி யானருட்—போத ராவரே.

இங்ஙனம்,

ஸ்ரீ மெய்கண்ட சித்தாந்த வித்தியாசாலை
சிதம்பரம். 12—9—53

ப. அ. கிருஷ்ணஸ்வாமி,
தமிழாசிரியன்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

வாருண மான்மிய வசனம்.

முதலாவது — கடவுள் வாழ்த்து.

முத்த மாலிகை மடவரற் கோற்றேடி முளரி
யத்த மார்தரு மருப்படுங் குருக்களை யளப்பான்
வைத்த தென்னவக் கோட்டுடை வாரண மான
சித்த நாதனிற் சித்தியந் தேவனிற் றிகழ்வாம்.

விநாயகர், சிவபெருமான், உமாதேவியார், திருமால், இலக்குமி, பிரமன், சரஸ்வதி, முருகவேள், திருநந்திதேவர், ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய வரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய வடிகள், இந்திரன், கங்கை, திருப்பாற்கடல், திருச்சைலம், வசிட்டர், அருந்ததி, உருப்பசி, வாருணம், கௌத்துவமணி, மந்தாரம், ஐராவதம், சனகன், சேடன், பிரணவம், நாரதன், காமதேனு. அரிச்சந்திரன். ததீசி, நந்தனவனம், உச்சைச்சிரவம், தாய், தந்தை, குருமார் முதலாயினோரை வணங்கி வாருண மான்மியத்தைச் சுருக்கமாய் வசன நடையிற் சொல்லுகின்றோம்.

இரண்டாவது — புராண வரலாறு.

நைமிசாரணியம் என்னும் சிறந்த வனத்தில் இலகிதன் முதலிய முனிவரர் சிவபெருமானைக் குறித்துச் சத்திரயாகஞ் செய்து வருங்காலத்திற் சூதபுராணிகர் அவ்விடம் வந்தார். அவருக்குப் பலவித உபசாரஞ்செய்து முனிவர்கள் அவரை நோக்கி "சுவாமி! சிவக்ஷேத்திரங்கள், விபூதி, விதேகம், காரண மாகிய மூலம் எனப் பலவிதப்படும் என்று கூறி விபூதி முதலிய க்ஷேத்திர வைபவங்களை முன்னொரு காலத்தில் திருவாய் மலர்ந்தருளி

னீர், இப்போது இவ்யாகம் நிறைவேறும் வண்ணம் மூலக்ஷேத்திரங்களின் மகத்துவத்தை எங்களுக்குத் தெரிவிப்பீராக" என்று பிரார்த்தித்தார்கள். சூதர்; மூலக்ஷேத்திரம் – கைலை, காசி, கேதாரம், வதரி, காஞ்சி, அருணை, புலியூர், இடைமருது வாருணம் எனப்பலவாம். அவற்றுள் வருணபுரி பிரதான மாதலால் ஆதிமூல க்ஷேத்திரமெனப்படும். அது ஸ்தல புனிதம், தீர்த்த மாதுரியம், மூர்த்திசாந்நித்தியம். உடையது. அவ்வருணபுரி மகாத்மியத்தை ஒருகால் ஸ்ரீ பரமசிவன் உமையம்மைக்கு உபதேசித்தார். அவர்பால் குமாரக் கடவுளும் அவர்பால் நந்திதேவரும், அவர்பால் சனற்குமாரமுனிவரும், அவர்பால் வியாசருங் கேட்டனர். அவ்வாதராயணர் பிரமாண்ட புராண மூலமாய் எனக்கு கருணை புரிந்தனர். அன்றியும் வேதாகமங்களிலும் இதிகாச காவியங்களிலும் இத்தல விசேஷம் சொல்லப்படும். பிரமதேவர், நாரதர், காசிபர், நாரணர், முற்கலர். இந்திரர் முதலிய பெரியோர் இத்தலமகிமையைக் கேட்டுப் புகழ்ந்திருக்கின்றனர்" என்று கூறினர். முனிவர்கள் "வாருண மான்மியத்தைச் சனற்குமார முனிவர் கேட்டருளியபடியே உரைத்தருளும்." என்ன, சூத முனிவர் வருணன் பூசித்தது முதல் சந்திரகுத்தன் வணங்கியது ஈறுகத் தலமான்மியத்தைச் சொல்லத் தொடங்கினர்.

மூன்றாவது – வாருணப் படலம்.

"பரசிவ லிங்கமாய்ப் பண்ட மெய்ப்பொருள்
கரவிலா வாருணக் கரண்டை தோன்றின
னரவணி செஞ்சட ராதி மூலமென்
றிரவிலா ருரைத்தன ரிதற்கு நாமமே."

நைமிசாரணிய வாசிகளே கேளுங்கள், இப் பிரபஞ்சம் காரியப்பட்டு வருதலின் இதற்குக் காரணமாக முழுமுதற் கடவுள் ஒருவர் வேண்டும். அவரையே சிவபெருமான் என்று நான்கு வேதங்களும் கூறும். அப்பெருந்தகைக் கடவுள் பரசிவ

லிங்கமாய் ஆதியில் வாருணஸ்தலத்தில் முளைத்தனர். அப்புண்ணிய லிங்கத்தினின்றும் சத்திகள் ஐவர் உதித்தனர். அவர்கள் ஐவரும் நிஷ்கள சக்திகளாம். அவருள் சிவ சாதாக்கியம் அமூர்த்தி சாதாக்கியம், மூர்த்தி சாதாக்கியம், கர்த்துரு சாதாக்கியம், கன்ம சாதாக்கியம் ஐந்தும் தோன்றும்.

இவற்றின் தத்துவம் மூர்த்தி பிரபாவம் மூன்றுவிதமாய்க் கூடித் தியானிப்பார் பொருட்டு ஒன்றாய் அருவுருவாய்ச் சதாசிவமாம். இக்கன்ம சதாசிவமே விந்து பீடமாய் நாதம் லிங்கமாம். விந்துவாவது அடிபீடமாய்க் கன்ம சாதாக்கியமும், நாதமாவது இலிங்கமும் ஆயிற்றென்று அறிக. எவ்வாறெனின் கன்மம் அடிபீடம், கர்த்துரு கண்டம், மூர்த்தி பாணி வட்டம், அமூர்த்திதுவாரம் இந்நான்குங்கூடில் விந்துவாம். அதன்மேல் சிவசாதாக்கியம் இலிங்கம். இஃது நாதம் இவ்வாறு விந்து நாதமாய் இலிங்கமாயிற்று. அச்சிவ குறியிலிருந்து பிரகிருதித்தோற்றம் உண்டாயிற்று ஆதலின் இத் தலத்தை ஆதிப்பிரகிருதி க்ஷேத்திரம் என்பார்கள். பிராகிருதப் பிரளயத்தில் சமஸ்த பூதங்களும் ஒடுங்க முனிவர்கள் பலரும் இச் சிவலிங்கத்தண்டை கூடி முறையிட்டார்கள் இவ் விலிங்கத்தினின்று சிவபெருமான் தோன்றி முனிவர்களை நோக்கி ஈண்டு ஈசான்யத்தில் தோன்றும் குகையில் போயிருங்கள் என்றுகூறி மறைந்தார். முனிவர்களும் அவ்வண்ணமே செய்து உய்ந்தார்கள். அதனல் இதற்கு ஈசான க்ஷேத்திரம் என்று பெயர், (அன்றியும் சிற்றம்பலத்திற்கு ஈசானியத்தில் இருப்பதால் ஈசான க்ஷேத்திரம் என்று சிதம்பர புராணமும் கூறுகின்றது.) இத்தல விலிங்கமும் ஞான விலிங்கமென்றும் பிரளய விலிங்கமென்றும் ஆதி திருமூலட்டானன விலிங்க மென்றும் பெயர் பெறும். யோகஞான பிரளயத்தில் பெரியோர்கள் இவ் வாதிமூல விலிங்கத்தில் ஐக்கியமாவார்கள். அன்றியும் முன்னொரு கற்பத்தில் காசிப முனிவர் ஒரு யாகம் செய்தபோது வருணன் மழையைப் பொழிந்தான். முனிவரது கோபசாபத்தால் வருணன் ஜலரோகியாகிப் பிரமதேவனிடத்தில் விக்ஞாபிக்க அவர் ஸ்ரீகைலாயஞ்சென்று சிவனை "வணங்கு"யென்றனர். அவ் வண்ணமே கைலைக்குச் சென்று வணங்கிச் சிவபெருமான் கட்டளையால் பரதகண்டத்தில்

பெண்ணை நாட்டில் வெள்ளாற்றின் வடகரையில் விளங்கும் ஆதி மூல க்ஷேத்திரத்திற்கு வந்தான். அவ்விடம் ஒட்டகமும் பாம்பும் புலியும் சிவலிங்கத்தைப் பூஜிக்கக்கண்டு நின்றபோது ஒரு நாகணை வாய்ப்புள் வெள்ளாற்றில் மூழ்கிச் சிவனை அர்ச்சிக்கக்கடவாய் என்று சொல்லிச் சிவலோகஞ்சென்றது. வருணன் அங்ஙனமே நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சுவேதநதியில் நீராடிப் பெரியகோயில் எனும் ஆதிமூலேஸ்வரர் கோவிலில் புகுந்தபோது சிவலிங்கத்தினின்று சூலபாணி முதலிய பல முகூர்த்தங்கள் தோன்றக்கண்டு பணிந்து வணங்கினன். சிவபெருமானும் கோயிலின் மதிற்கீழ்ப்புறத்தில் சூலத்தாலே ஒரு திருக்குளம் உண்டாக்கி இச் சூல தீர்த்தத்தில் ஸ்நானம் செய்பவர் சிவானந்த வாரி படிவர் என்று கூறி மறைந்தனர். பிறகு வருணன் அத் தீர்த்தத்தாடி நித்திய நைமித்திக விசேஷ பூஜைகளைப் பல்லாண்டு செய்து ஒரு சிவராத்திரியில் சிவனைப் பூஜித்து வணங்கினன். ஆதிமூலக் கடவுளும் அவனுக்குத் தரிசனம் கொடுத்து நோயை நீக்கி சபாரத்னம் என்னும் மாலையை வழங்கி முன் அசானைக் கொன்ற பாவத்தையுங்களைந்து தேவர் பூமழை பொழிய சிவலிங்கத்துள் மறைந்தனர். பிறகு வருணன் ஆதிமூல லிங்கத்திற்கு அக்கினி திசையில் தன்பெயரால் தீர்த்தங்குடைந்து சிவலிங்கப் பிரதிட்டை செய்து பூஜித்துப் பிராமணர்களுக்கு அகரம் உண்டாக்கி மேற்குத்திசை சென்று பாக்கியம் உற்றிருக்கின்றனன். அதனால் இதற்கு வருணபுரி என்றும் பெயர். இத்தலத்துக்கு வந்து இத்தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து இம்மூர்த்திகளைத்தெரிசிப்பவர்கள் இம்மை மறுமைப் பயன்களைப் பெறுவார்கள் ஒட்டக ரூப மாறிய சனற்குமான் கெடுநாட் சென்றபின் தலத்தின் பின்னிட்ட வர்த்த மானங்களைக் கேட்டனன் என்க.

நான்காவது – இந்திரப் படலம்.

“ஒன்றாய்ப் பலவா யுயிர்க்குயிரா யுருவு மருவுங் கடந்தப்பா
னன்றாய் ஞால மதுதானுய் ஞாலம் புரக்குங் கனல்மயமாய்
குன்றாய் நிறைந்த சிவபெருமான் கோயி லமர்ந்த வாருணத்துச்
சேன்றான் செல்லி னுவந்தேறுஞ் செல்வன் வெள்ளை வாரணனே.”

நமுசி யென்னு மசுரன் தேவலோகத்தை வருத்தி வருகையில் இந்திரன் அவன்மேல் விட்ட வச்சிராயுதம் அவன் சிரசிற் சென்று மறைந்ததுகண்டு பின்னிட்டுக் குயிலுருவமாய்ப் பூலோகத்துக்கு வந்து வருணபுரியடைந்து கிழக்கே முத்துக்கிருஷ்ணபுரியில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து பூஜித்துக் கார்த்திகை மாதம் ஆதிவாரத்தில் ஆதிமூல சுவாமியை வணங்கினன். சிவபெருமான் விருஷப வாகன ரூடராய் காட்சி கொடுத்துப் பஞ்சாட்சர உபதேசம் செய்து "இக்கடற்கரையிற் சென்று கடல் நுரையை எடுத்து அதனல் அசுரனை வாட்டுதி" என்று கூறி மறைந்தபோது இந்திரன் சிவபெருமானை வேதாகம விதிப்படி அபிஷேகித்து வணங்கிப் பஞ்சாட்சர கவசஞ் சொல்லிக் கடல் நுரையால் நமுசியை வதைத்து தேவலோகத்தில் அரசாட்சி செய்து வருகின்றான். இந்திரன் லிங்கப் பிரதிஷ்டை செய்த இடத்திற்கு விசுவநாதம் என்று பெயர். ஆதிமூல லிங்கத்தையும் இவ்வைந்திர லிங்கத்தையும் கார்த்திகை ஞாயிற்றுக்கிழமைகளில் கண்டு வணங்குவார்களுக்கு வினை, நோய், அரக்கர்பீடை, ஆணவாதி இலவாம், இம்மை மறுமை நலங்கிடைக்கும். சுவாமி உபதேசித்த பஞ்சாக்கர கவசத்தை வடமொழிப் புராணத்துட் காண்க.

ஐந்தாவது — பார்க்கரப் படலம்.

"உலகவை தோன்றத் தோன்று மோள்ளொளி யரக்கர் வெள்ள
மலகினு லடர்க்க வாற்ரு தரியசா வன்னி யைக்கூய்த்
திலகமாம் வேத காயத் திரிமனுப் பற்க ளுமை
மிலகுறப் பேற்று னியாவ னிவனிறை வருணை மேவும்."

ஒருநாள் சூரியோதயத்துக்கு முன் மந்தேகம் என்னும் தீவிலிருந்த அறுபதினுயிரம் தயித்தியர் விசிகம் வீசிச் சூரியன் வருகையைத் தடுத்தனர். சூரியன் தன் குமாரன் சாவன்னியை அழைத்துக் "காயத்திரி மந்திரத் தெய்வமாகிய சிவன் வாருணஸ்தலத்தில் இருக்கின்றான்; அவனைக்கண்டு வணங்குவாயாக."

என்ன, சாவன்னி பூஜாதிரவியங்களுடன் வருணபுரி வந்து திருக் கோயிலுள் அமுதசரசு என்னும் தீர்த்தம் குடைந்து சிவபெரு மானை அபிஷேகித்து வணங்கினன். இப் புண்ணியவசத்தால் சூரியனை மறைத்த அசுரர் ஓடினர். ஆதித்தனும் அஸ்வனி நட் சத்திரத்தில் பிரவேசித்துச் சிவபெருமானைக் கண்குளிரக் கண்டு வாழ்த்தினன். சிவபெருமான் அவனுக்குப் பலவரங்களையுந்தந்து சாவன்னியையும் மனுவாகும்படிக் கட்டளையிட்டுச் சிவலிங்கத் துள் மறைந்தருளினர். இவ்வமுத சரசுக்குச் சாவன்னி தீர்த்த மென்றும் பெயர். அம்மன் சந்நிதிக்குமுன் தற்காலம் கிணறு இருப்பதே அத்தீர்த்தம்.

சித்திரை மாதம் முதல் ஏழு தேதியிலும் இச்சூரிய பூஜை யைத் தரிசிப்பவர்கள் நல்லபேறு பெறுவர்.

அன்றியும் முன்னொரு கற்பத்தில் சூரியனுடைய மனைவி சஞ்ஞிகை வெப்பத்துக் காற்ருமல் தன் தகப்பன் தொட்டாவின் வீட்டிற்குப் போயிருந்தாள். மாமன் சொற்படி தன்வெம்மைச் சுடரைக் குறைக்கக்கருதிச் சூரியன் சாணைக்கல்லில் தன்உடலைத் தேய்த்தான், அது விஷந்தங்கிய கல்லாதலால் இவன் உடம்பில் விஷம் பாய்ந்தது. வருணை ஸ்தலத்துக்குவந்து ஆதிமூலத்தைப் பூசித்து விஷம் நீங்க, முத்துக்கிருஷ்ணபுரியில் இந்திர லிங்கத் துக்கு வடகிழக்கில் சிவலிங்க பிரதிஷ்டை செய்து வணங்கினன். இத்தலம் ஆதித்தேச்சரம் எனப்படும்.

இச் சிவலிங்கத்தைத் தற்காலம் செட்டிமார் பேர்த்து வேறு இடத்தில் பிரதிஷ்டை செய்திருக்கிருர்கள். இக் கோயி லுக்குச் செட்டிகோயில் என்று பெயர். இவ்வாதித்த லிங்கத்தை வணங்குபவர் சகல நன்மைகளையும் பெறுவர்.

ஆருவது – பிரமசன்மப் படலம்.

சேல்க வாருணஞ் சேல்கநீர் — நல்க நல்லருள் நாட்டுவல்
சேல்க நீரெனச் சேஞேரீஇப் — புல்லும் வாசகம் போற்றினன்.

பாண்டி மண்டலத்திலே திருப்பரங்குன்றத்தில் பிரமசன்மன் என்னும் பிராமணனுக்கு உத்தமியாகிய மனைவியும் அநேக பிள்ளைகளும் இருந்தனர். அவ்வேதியன் சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்க விரும்பியபோது அவன் மூத்த குமாரன் சுரஞ்சனன் என்பான் பூர்வமீமாஞ்சையிற் கூறிய கன்மமே சிறந்தது என்ன, பிதா; "அக்கன்மங்களினாற் பயனில்லை என்று கண்ட தாருகா வனத்து ரிஷிகள் வாருணஸ்தலத்தை யடைந்து கன்மசம் என்னும் சிவயாகஞ் செய்து பேறுபெற்றனர். ஆதலின் சிவ புண்ணியமே செய்யத்தக்கது." என்று தன் பெண்சாதியோடும் சுரஞ்சனனோடும் புறப்பட்டுச் சிதம்பரம் வந்து சுவாமி தரிசனஞ் செய்தான். பிறகு காசியைத் தரிசிக்கக் கருதிப் பயணப்பட்ட போது, தன்பிதா காணவும் நடக்கவும் முடியாமை கண்ட மகன் அவனைத்தன் தோள்மேற் சுமந்துபோகையில் "வருணபுரிக்குச் செல்லுங்கள்" என்றோர் அசரீரி உண்டாயிற்று. அவ் வண்ணம் வந்து உருத்திராபிஷேகஞ்செய்து வணங்குகையில் பிற்றை ஞான்று மூவர் முதலானோர் தரிசித்தாங்கு காசி கயிலை முதலிய புண்ணிய ஸ்தல தரிசனம் அவ்விடத்துக்கண்டு அங்குச் சிலநாள் வசித்து முதியோன் கற்புடைய நங்கையோடும் புண்ணியலோகம் சென்றனன்.

சுரஞ்சனன் அவர்கள் உடலை ஆகம விதிப்படி தகித்து அஸ்தியை வெள்ளாற்றில் விட்டுச் சுவர்ண பாத்திரம்போல் பிரகாசிக்கக் கண்டு சிவபெருமானைத் துதித்துத் தன்னூடுபோய்ச் சேர்ந்தனன். இந்நதி தீரத்திற் சிரார்த்தாதி கர்மங்கள் செய்யிற் பலகோடி புண்ணியமாம்.

ஏழாவது - மாரப் படலம்.

"தேட்டமுற் றோளிரும் பார்ப்பான் திகழ்கடன் முடித்துக் கொண்டு
வாட்டமில் மனத்த னாகி மறிகரை தன்னி னெய்தி
நாட்டமூன் றுடைய வாதி நம்பரனிருக்கை சார்ந்து
கோட்டமும் வணங்கி நின்று கும்பிட்டுக் குடந்தம் பட்டு."

பால்ஹிக தேயத்தில் தாரணிகம் என்னும் அகரத்தில் வசித்த சோமுகன் என்னும் பிராமணன் ஓர் இரவில் தன்மகன் மாரனை வயலைக்காக்க அனுப்பிவிட்டுத் தான் நடு இரவில் சென்ற போது, மகன் இவனைக் கள்வனென்றெண்ணித் துரத்தியடிக்க அதனால் இறந்தான்.

பின்னர் மகன், பிதாவென்றுணர்ந்தான். பிரமச்சாயை பற்றிக்கொண்டது. பித்துக்கொண்டான்போல் காஞ்சி சேர்ந்து ஒரு வழியில் உறங்கிக்கொண்டிருந்தான். அவ்வழிச் சென்ற சுதந்து முனிவர் இவனை எழுப்ப, இவன் தூக்கம் தொலைந்து முனிவரைக் கொல்லப் போனான் அவர் தம் கையிலிருந்த நீரை அவன்மேல் ஊற்றினார். அதனோடிருந்த வில்வம் பட்டமாத்திரத்தில் சற்று நீங்கியது. இவனை முற்றும் பரிசுத்தனாக்கக் கருதிச் சிருக்குச்சிருவத்தை நோக்கி, "இவனைப் புண்ணிய ஸ்தலத்தில் கொண்டுபோய் விடுக" எனவே, அவை அவனைத் தூக்கிவந்து வெள்ளாற்றங்கரையில் விட்டுப்போயின. அவன் வெள்ளாற்றில் மூழ்கிச் சதாசிவ தரிசனம் செய்து தோஷம் நீங்கிப் பெரிய கோயிலுட் சென்று அக்கினி மூலையிலிருக்கும் வில்வ வனத்தில் தளிர்கொய்து சிவனை அருச்சித்து நற்கெதி பெற்றான்.

இவ்வில்வத்தால் ஆதிமூலத்தை அருச்சிப்பவர்கள் சகல தோஷமும் நீங்கப் பெற்றுச் சுகவாழ் வடைவர்.

எட்டாவது - சக்கரதீர்த்தப் படலம்.

"முந்த யாம்வரு — மீந்த வாருணத்
தந்த மில்சமை — நின்று வாழ்துதி
தேண்டி ரைதரு — மண்டு வாருண
வண்ட தீர்த்தத்துக் — கண்டுன் சக்கரம்."

திரிகூடாசலத்திலிருந்து கஜேந்திரன் என்னும் யானை ஆயிரம் பெண்யானையோடும் இரண்டாயிரம் கன்றுகளோடும் வெள்ளாற்றின் மடுவங்கரையில் வந்து நீராடுகையில் அந்த

யானையை முதலையொன்று பிடித்துக்கொண்டது. இவ் யானை முன் ஜனனத்தில் விஷ்ணு அடியானுய் இருந்ததால் அப் பத்தி மேற்கொண்டு நாராயணனைநோக்கி ஆதிமூலமேஎன்று அழைத்த போது, அம்மேகவண்ணன் தன் சக்கரத்தால் அம்முதலையைக் கொன்று யானையைக் காப்பாற்றினன். சக்கரமோ கீழுலகம் புகுந்து நிற்கக்கண்டு விஷ்ணு வாருணஸ்தலம் அடைந்து ஆதி மூலத்தைப்பூஜித்துப் பலவாறு தன்குறைகளை எடுத்துக்கூறச் சிவ லிங்கத்தினின்று சிவபெருமான் ஏகபாத திரிமூர்த்தியாய்த் தோன்றி லட்சுமி நாயகனை நோக்கி "வாருண தீர்த்தத்தில் உன் சக்கரத்தைக்கண்டு பெறுவாயாக" என்றருள, அவ்வாறே முகில் நிறக் கடவுள் நேமியைப் பெற்றுப் பெரியகோயிலிற்கு மேற்புறத் தில் விஷ்ணு பீஜம் என்னும் ஸ்தலத்தில் வீற்றிருக்கின்றனர். இவ் விஷ்ணுவை அத்தலத்தில் கண்டு தரிசிப்பார் மேன்மை யடைவர். வாருண தீர்த்தத்திலிருந்து சுதரிசனம் தோன்றியதால் அதற்குச் சக்கர தீர்த்தம் என்று பேர்.

ஆழி தீர்த்தமாம் — பாழி மண்டலி
யூழி ஞடினுர் — வாழி வாழியே.

ஒன்பதாவது - கமனீயப் படலம்.

"அத்தல நீபணிந் தறுதி வல்வினை
யுத்தம வெனமொழிந் துரைத்த வாசகஞ்
சித்தமார் தரவினை தேய்ந்த வாறெனச்
சத்தனு முவந்தனன் றலைவி மேலெழீஇ."

காசுமீர தேசத்தில் ஸ்ரீநகரில் கமனீயன் என்னும் அரச னும் கற்பிற் சிறந்த அவன் மனையாள் சுநந்தையும் வாழ்ந்துவருங் காலத்தில் துவாதசியில் தைலாப்பியங்கனம் செய்ததால் அரசன் குட்டநோய் அடைந்தான். இதைக்கண்ட அயல்தேசத்து மன் னன் இவன் அரசைப் பிடுங்கிக்கொண்டு மனையாளோடு காட்டுக் குத் துரத்திவிட்டான்.

சுநந்தையும் தன் புருஷனைக் கூடையில் வைத்துத் தலையிற் சுமந்துகொண்டு சென்றனள். தண்டகாரணியம் வந்தபோது நீந்துரிஷி, தக்கன் கதையைச் சொல்லி அவன்வேள்வி பங்கமான தோஷத்தை நீக்கிக்கொள்ள வருணபுரியில் "தன்பெயரால் வனம் உண்டாக்கி வேள்விசெய்து உய்ந்தனன். விரைவில் நீங்கள் அங்குச்செல்லுங்கள்" என்றார்.

அக்கட்டளை மேற்கொண்டு திருக்கழுக்குன்றம் வந்து திசை தெரியாது மயங்குகையில் இரண்டுகழுகுகள் அவர்களுக்கு முன்தோன்றி நாங்கள் வாருணைஸ்தலத்தைப் பதினைந்து நாளைக்கு ஒருதரம் பிரதோஷவேளையில் போய்த் தரிசிக்கின்றோம். அத்தல மதிலின் கீழ்ப்புறத்தில் ஒருமண்டபம் உண்டு. அம்மண்டபத்தில் உள்ள பிருகு முனிவரை நீங்கள் நினைத்தால் விரைவில் அவ்விடம் போய்ச்சேரலாம் என்றன. அவர்கள் அவ்வண்ணமே நினைத்து அம்முனிவர் முன் நின்றனர். அத்தபோதனர் கட்டளைப்படி வெள்ளாற்றில் சுவாமி ஐப்பசி மாதம் முழுவதும் தீர்த்தம் கொடுக்கக்கண்டு அந்நீரால் சுநந்தை தன் புருஷனைக் கழுவித் தன் பேரால் கோயிலுக்கு நிருதி திசையில் ஓர்மண்டபம் (மானம்பாடி மண்டபம்) எடுத்துப் பின்னர் சூல தீர்த்தக்கரையில் மஞ்சளில் அம்மையை ஆவாகித்துப் பூஜித்து அதைப் புருஷன்மேல் தடவி அந்நீராலாட்டிப் பார்ப்பனி யொருத்தியை யழைத்துப் பாத பூஜை செய்து அம்மனாகப் பாவித்து அந்நீரைத் தன் நாயகன் மேல் தெளித்து வந்தாள்.

இப்படி நாற்பத்துநாலுநாள் நடந்தது. நாற்பத்தைந்தாம் நாள் ஒருவெள்ளிக்கிழமையன்று பிராமணப் பெண்ணொருத்தியும் அகப்படாமையால் அமிர்தவல்லி சந்நிதிக்குப்போய் இது என்ன சோதனை யென்று முறையிட்டாள். அமிர்தவல்லியே வேதியர் மங்கையாகத்தோன்றி பூஜைபெற்றாள். அத்தீர்த்தத்தை தெளித்த மாத்திரத்தில் அரசன் பிணி நீங்கித் திவ்விய தேஜஸைப்பெற்றான். அம்மன் மறைந்த பின்னர் பரமசிவன் பார்வதியோடு இடப வாகனத்தில் சூலதீர்த்தக்கரையில் காக்ஷி கொடுத்து அரசனுக்குக் கவசமும் வாளும் அளித்து மறைந்தார். அவற்றைப் பெற்ற அரசன் தன்னாடு சென்று பகைவனை வென்று பட்டம் சூடிப் பல்லாண்டு ஆண்டு பலபுத்திரரைப் பெற்று மூத்த குமாரனுக்குப்

பட்டங்கட்டிவிட்டு மனைவியோடும் தீந்து ரிஷியோடும் வாருணம் வந்து பல திருப்பணிகள் செய்து பல உற்சவங்கள் நடத்தி வாழ்ந்து வந்தனன். இவனே பல்லவகுலத்துக்கு முதலரசன். அக்காலத்தில் தீந்து முனிவரை வணங்கி அமிர்தவல்லி யம்மை யின் மகிமையைத் தெரிவிக்க வேண்டுமென அவர்,

"மூலமா விலிங்கத்து முன்னு மீங்கிவள்
கோலமாப் பரையெனக் குலவி நின்றனள்
வாலையா யமுதமெய் வல்லி யாகிய
சீலமே நன்றெனத் தீந்து சொல்லுவான்." என்ற வண்

ணம் சொல்லுவா ராயினர்.

பத்தாவது – திருமணப் படலம்.

"திருமறு மார்ப னந்தனத் திடையத் தினகரர் கோடிமே லொளிவிட்
டிருபுலம்வியப்பத்தோன்றுபொற்சீந்தி லேம்மனையெனவுளந்தரித்துக்
குருமணிப் பந்தர்க் குயிற்றியஞ் சரசிற் குளிர்தரு மமுதினால் வளர்ப்ப
மருவிய வழகான் வளர்ந்தன ளென்னை வழங்கிய வமுதமெய் வல்லி."

உலக மாதாவாகிய பார்வதி தேவியார் தக்கன் இடத்துப் பிறந்த குற்றம் பார்வதியாகியும் விகுண்டி தவத்தில் உதித்தும் நீங்காமை கண்டு வாருணஸ்தலத்தில் பொற்சீந்திற் கொடியாகி மகாவிஷ்ணுவினுடைய நந்தவனத்தில் வளருகையில் அமுதசரசில் உண்டாகிய அமுர்தத்தால் மாயவன் வளர்க்க அமிர்தவல்லியாய் வளர்ந்தனள்.

நாரதர் சொல்கேட்டு மதங்கன் இக்கொடியைக் கவர வருகையில் விஷ்ணுவால் அவன் சங்கரிக்கப்பெற்றனன். அவன் சிரம் விழுந்த இடம் மதங்கவனமாயிற்று

இஃதிங்ஙனம் நிகழச் சிவபெருமான் நந்தி தேவரை யழைத்து, வருணபுரியில் நமக்கு விவாகம் நடக்க தக்கதுசெய்க என, நந்திதேவரும் யாவரையும் அழைத்து எல்லாவற்றையும் திட்டஞ் செய்து வைத்தனர். சிவபெருமான் திருமணக்கோலங்

கொண்டு கொடியருகு நிற்க, அம்மனும் சிறப்புற்ற பெண்ணுருவம் கொண்டாள். சிவபெருமானும் சகல வைபவத்தோடு உமா தேவியாரை விவாகம் செய்து கொண்டு நாலாம்நாள் மகதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து அம்மக பூரணையில் அங்கு ஸ்நானஞ்செய்த தேவர்களுக்கும், தும்புரு, சித்திரசேனன், குபேரன், சனி, இந்திரன் முதலாயினோர்களுக்கும் நன்மை செய்து, தான் பெரிய கோயிலிற்சென்று சிவலிங்கத்துட் கரந்தனர். அம்மனும், சுவாமிக்கு இடதுபுறத்தில் அமர்ந்தனள் என்று நீந்து முனிவர் சொல்லக் கமனீயனும் சுநந்தையும் கேட்டு மகிழ்ந்திருந்தனர். இச் சமுத்திரத்தில் விசேஷ காலங்களில் ஸ்நானஞ் செய்பவர் புண்ணியம் பெறுவர்.

எனவே, இம்மக தீர்த்த மகிமையைச் சூத சங்கிதை கீழ்க்காணுமாறு விதந்தோதுவதும் அறிந்துயாவரும் தீர்த்தமாடி நலம் பல பெறுவார்களாக.

"எத்திசையும் புகழ்தில்லைக் கீசானப் பெருந்திசையிற்
கத்துமறி திரைப்புணரிக் கரைக்கணுரோ சனைநீள
மோத்தவக லமுமுடைத்தா யும்பர்தொழப் படுவதாய்ச்
சித்தமல மகற்றுதுய்ய தீர்த்தமென வொன்றுளதால்.
பவமறுக்கு மத்தீர்த்தம் பண்புரைப்பா ரெவர்முன்னுட்
தவமறுக்கு மடைமையினுற் சலபதியா கியவருணன்
சிவமறுக்கி லாதமறை தேர்ந்தவொரு வனைச்சேகுத்தவ்
வவமறுக்க வவனியெலா மலைந்துமரு மையின்வருந்தி
மாகம்வரு கோடுநகாள் வளர்துய்ய தீர்த்தந்தோய்ந்
தேகநாய கற்றேமுதி யிரிதருநின் பழியென்றுன்
ஓகைமிகு வருணனுஞ் சென்றுரைத்த படியங்நாளிற்
போகியசீ ரத்தீர்த்தப் புனல்படிந்து நீறணிந்து."

பதினோராவது - விநோதானப் படலம்.

"இதுவேனற் றுதை சோற்ற வியலும் வாருணமேன் றோர்ந்து
கதுமென வணங்கி நின்று கைத்தலம் பறையைப் போன்று
புதுமைய தோற்போர்த் தாணி போங்க நன்றமுத்தி மாண
விதுவனை தந்த வேலை வேண்டிய வமைத்து வீங்கி."

நாரதர் பிரமதேவர் கட்டளைப்படி பூலோகத்துக்கு வந்து திருவதிகை மார்க்கமாய்ச் செல்லுகையில் கீழே யிழுக்கப்பட்டுத் தன்பிதா கூறிய வாருணஸ்தலத்தை நோக்கிக் கோயிலிற் சென்று பரமசிவனைப்பாடி அத்தல விருக்ஷமாகிய கொன்றையின் கீழ்ச் சிவபெருமான் கட்டளைப்படி அமர்ந்து தியானிக்கச் சிவன் தோன்றி அவர் தக்ஷயாகத்தில் இழந்த வீணையைக் கொடுத்து மறைந்தனர். இக்கொன்றை தவஞ் செய்யத் தக்க விடம்.

பன்னிரண்டாவது - சித்திரகுத்தப் படலம்.

"திருந்து நான்மறை யாகம நெறியவை செப்புங்
கருந்த டங்கணி காதல ஞதியாங் கருத்தன்
வருந்து மன்பர்த மனவலி குமைக்குமா வாரி
பொருந்து வாருணம் பொற்புற நீயின்றே புகுந்து."

விரிஞ்சிபுரத்தில் வசுதத்தன் என்னும் வைசியனுக்குப் பிள்ளையில்லாமற் பல தர்மம் செய்து அவ்வூர்ச் சிவாலயத்தில் வணங்கியபோது சிவபெருமான் தோன்றி வருணபுரிக்குச் சென்று முன்கற்பத்தில் மாயவன் பிரதிஷ்டைசெய்த சோமஸ்கந்த மூர்த்தியை வணங்குக என்று மறைந்தபின்னர் அங்ஙனமே செய்து ஓர் ஆண்மகனைப் பெற்றுச் சித்திரகுத்தன் என்று பெயரிட்டான்.

நாரதர் இக்குழந்தையின் இலக்ஷணங்களைச் சொல்லி இவனுக்குப் பன்னிரண்டு வயதில் ஒரு விபத்து உண்டு; கூடுமாயின் நீக்கிக்கொள்ளுக. என்று கூறலும், பிதா மாதா துக்கித்தார்கள். சித்திரகுப்தன் அவர்களுக்குத் தைரியஞ் சொல்லி வருணபுரி வந்து ஆதிமூலம் அமிர்தவல்லியை வணங்கித் திருநீலகண்ட சுவாமியை வணங்கும்போது பன்னிரண்டாம் வயதாகிய சித்திரைமாதம் சித்திரை நக்ஷத்திரத்தில் இயமன் வந்து குழந்தாய் உனக்கு என்ன வேண்டுமென்று அவனைப் பிடிக்கப்போனான். அம்மன் தோன்றிச் சித்திரகுத்தனைத் தடவிக்கொடுத்துக் காலனைக் கடிந்துகொண்டார். அப்போது குத்தன்,

"பிணியுந் தீர்த்தனை யாயுளும் வழங்கினை பின்னுங்
கணியும் நல்லருட் கருணையுஞ் செய்தனை காட்சி
தணியு மூடலிற் றூரணி புரப்பவன் றகையிற்
பணியும் பாதத்தாய் வாருண மேவிய பரமே." என்று

துதித்தான். சுவாமி இவனை இயம லோகத்தில் கணக்கனாக அமர்த்தினர். இயமனும் சிவபெருமானை வணங்கிப் பேறு பெற்றுச் சென்றான்.

பின்னொருசமயம் யமலோகத்தில் சித்திரகுத்தன் ஒரு பாவியைத் தண்டிக்கக் கணக்குக் காட்டுகையில் அவனிடம் சிவ புண்ணியம் இருத்தல் கண்டு அஞ்சி நடுங்கி வருணபுரி வந்து இன்றும் அர்த்தசாமம் பார்த்து பணிந்துகொண்டிருக்கிறான். அம்மன் கோயில் வடகீழ்ப்புறத்தில் குத்தன் உருவச்சிலையும் இருந்திருக்கிறது. முன்னாள் காலனைக் கடிந்த உற்சவமும் நடந்திருக்கிறது. அதனை ஸ்ரீ இராமசாமி செட்டியார் (தேவ கோட்டை) செய்யமுயன்றும் அஞ்ஞான்று கூடாதுபோயிற்று. எனினும் திருவருள் கூட்ட இனிது நடைபெறமாக.

பதின்மூன்றுவது – கோத்திட்டைப் படலம்.

"மண்ணுண்ட மாயவனும் மாமலரா னையகனும்
விண்ணுளுந் தேவர்களும் வேதாந்த நெறியினரும்
பண்ணார்ந்த பாப்பாடிப் பரவுவது பத்தியோடு
தண்ணார்ந்த தாரணியிற் றனியோங்கும் வாருணமே."

அகத்தியர் கைலைக்கு அகாலத்திற் சென்று சகுணத் தியானஞ் செய்ய, பெருமான் இவ்வணக்கம் வருணபுரியைச் சேர்ந்த கோத்திட்டை சித்தாச்சிரமத்திற் செய்யத்தக்கது எனக் கேட்டுவந்து தென்திசை நோக்குகையில்

"அக்கணமே குறுமுனிவ னந்திவண னருளேற்றுத்
தக்கணமே நோக்கிவரத் தம்பியரோன் பதின்மரோடு

பக்கலிலே யாடல்புரி யறுமுகவ னருள்பெற்றுச்
சக்கரஞ்சேர் மூலிகைத சாங்கமுடன் றரக்கொண்டு"

என்றபடி மூலிகை நிறைந்த பாத்திரமுங் கொண்டுவந்தார்.

கோத்திட்டை வந்தவுடன் அவர் மூலிகைப்பாத்திரத்தைக் கீழே வைக்க அது நாகலோகஞ்செல்ல, வைத்த இடம்

"சித்தத்துச் சித்தசனைச் சீறினன் பாதத்துத்
தித்தித்த தேனூட்டச் செஞ்சிலம்ப னன்றளித்த
சித்தபொருள் திருத்தியநீர்க் கமண்டலமப் பிலமேய்தப்
பத்தர்தம் படிறகற்றும் பதிதீர்த்த மாயினதால்." என்றபடி,

பதி தீர்த்தமாயிற்று. அத்தீர்த்தத்தில் தேவர் முனிவர்களோடு குறுமுனிவர் ஸ்நானஞ்செய்து அங்கு மலையுருவமாகிய சிவபெருமானைச் சகுணத்தியானம் செய்து அருள்பெற்று அதற்கு வடமேற்பால் தம்பெயரானிறுவிய அகத்தியனூர், (அத்தியானூர்) தமிழ்த் தெய்வ மிலங்கும் வேளிலங்குபட்டு (வேளங்கிப்பட்டு) முதலிய விடங்களுக்கு அணித்தாயுள்ள ஸ்ரீ அலங்கார நாயகி சமேத ஆவுடை நாதரையும் தரிசித்துக்கொண்டு பெரிய கோயிலுக்கு (வருணபுரி) வந்து மூலலிங்கத்துக்கு மேற்கில் ஒரு லிங்க பிரதிஷ்டைசெய்து போதியமலைக்குப்போய்த் தொல்காப்பியர் முதலாயினோர்க்கு உபதேசித்தார். அப்பன்னிருவரும் வாருண தரிசனம் செய்து ஆதிபுராண லிங்கத்துக்கு நிருதித்திக்கில் கோயிலுக்குள் ஒரு சிவலிங்கம் ஸ்தாபித்து முத்தி பெற்றனர்.

பதினான்காவது - துரந்தரப் படலம்.

"சேர்ந்தலர்ந்த செஞ்சலசச் சேயிழையா ளெனப்பொற்பு
வாய்ந்தலர்ந்த மடமங்கை மானப்புண் ணியவதியாள்
தீந்துலர்ந்த நிரயத்துத் தீதொழிந்த புங்கவர்பா
லாய்ந்தநெறி யதுவேண்டி யார்வருணைத் தலத்தேய்தி."

புண்ணியவதி என்னும் பெண்வருணபுரிக்குவந்து சித்திவிநாயகரை நோக்கி:—

“மூவர்க்கு முதலாகி முப்பொருட்கு முன்னின்று
யாவர்க்குந் துயரறுக்கு மியானைமுகக் கடவுடனைத்
தேவர்க்கு மரியவாத் தெளிவிதியாற் பூசித்துக்
காவமனோ ரதத்திரிகை கணித்துவழி நோற்றபினர்.”

என்றபடி மனோரதத் திரிகை என்னும் விரதம் நோற்று அப் புண்ணிய வசத்தால் துங்கபுரத்தில் துரந்தான் என்னும் வைசியனை மணஞ்செய்துகொண்டு கேதாரத்திற் பசுக்களுக்குப் புல் சுமந்து பணிசெய்து வருகையில் சுவாமி அடித்த பிரம்படியால் கருக்கொண்டு ஒரு பிள்ளையைப்பெற்றாள்.

அப்பிள்ளை நெடுநாள் வாய் பேசாமலிருப்பதையும் விஷபீடை வருத்தப்போவதையும் உணர்ந்து பிள்ளையோடு வாருணம் வந்தபோது வாசுகி என்னும் பாம்பு கடிக்கப் பிள்ளை இறந்தான். உடனே,

“தீதெறிந்த தமிழ்முனிவன் றிறத்தளித்த வெண்ணீற்றுன்
மாதளித்த மருமானுக் குயிர்நல்கி மறைந்திட்டான்
வாதழிந்த வமண்சமய மாய்ந்தொழியக் காழிவருஞ்
சாதறிந்த சம்பந்தத் தனிமுதலாஞ் சாமிவேள்.” என்றபடி

முருகக்கடவுள் சித்தவுருவங்கொண்டு மருமான் என்னும் அப்பையனை விபூதியால் எழுப்பி மறைந்தனர். ஊமையும் நீங்கிற்று. இவ்விபூதியைக் கொண்டுபோய்ச் சிறுவன் தன் மாமன் சாரின் சூலைநோய் தவிர்த்துப் பொருள் கொண்டுவந்து சிவ ஸ்கந்த ராலயங்களாதிய கோயில்கள் யாவையும் புதுப்பித்தான்.

பதினைந்தாவது - சந்திரதத்தப் படலம்.

“பிறைமுடிப் பெருமான் பாதம் பேசபு கோள்க ளெல்லா
முறையினிம் முறைமை பெற்றார் முன்னமிவ் வாருணத்தே
மறைமுதல் சுருதிகூறு மாற்றமீ தறையக் கேட்டி
கறைகெழு சுடர்வேற் றுங்குங் காரண மகதபூப.”

மகத தேசத்திலே குசும புரத்தில் அரசாண்ட சர்வார்த்த சித்திக்கு இளையென்றும், முரையென்றும் இருமனைவியர் இருந்தனர். சிவபெருமான் ஆண்டி வேஷமாய் வந்து தெளித்த நீர் இளையின்மேல் ஒன்பது துளியும், முரையின்மேல் ஒருதுளியுமாய் விழுந்தது. விசுவாசியான முரைக்கு மௌரியன் என்னும் மகன் உதித்தனன். இளைக்குக் குழந்தை பிறவாமையின் அம்மிக் குழவியால் வயிற்றில் இடித்துக்கொள்ள, கரு அழிந்து ஒன்பது துண்டுகளாய் விழுந்தன. முக்கிய மந்திரி ராக்ஷஸன் மந்திரம் ஜெபிக்க அவை ஒன்பது புத்திரர்களாயின. அவர்களுக்குப்பெரியோர் நவநந்தனர் எனப் பெயரிட்டனர்.

யாவருக்கும் பதினாறு வயதானவுடன் நவநந்தனர்களுக்கு ஏகமாய்ப் பட்டாபிஷேகஞ்செய்வித்து மௌரியனை மந்திரியாக்கி அரசன் இளைசகிதம் வனத்துக்குச்சென்றான் மௌரியன் புத்திரர் நூற்றுவருள் இளையவன் சந்திரகுப்தன் வெகு புத்திசாலி. இவர்கள் இராச்சியத்தில் பெரியஉத்தியோகங்கள் பெற்றனர். சந்திரகுப்தன் அநேக தேசங்களை ஜெயித்துக் கப்பங் கட்டச்செய்தான்.

இவர்களுக்காக உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்ட மனுஷர் சிலர் ராக்ஷஸனிடம் முறையிட்டபோது அவன் ரகசிய ஸ்தலம் ஒன்று கூட்டி அதில் நூற்றொரு பாத்திரங்களில் தீர்த்தம் வைத்து 101 இலை போட்டுப் பரிமாறி 101 விளக்கு வைத்து மௌரியனையும் அவன் பிள்ளைகளையும் பிரவேசிக்கச்செய்து கதவை யடைத்தான்.

சந்திரகுப்தன் மட்டும் அவற்றைப் புசித்து 101-ஆம்நாள் கதவைத்திறந்தபோது வெளியே வந்து பொக்கிஷவேலை பெற்று, சிங்கத்தை ஓட்ட விரும்பிவந்த எல்லாரும் அருத்தங்கூறிய "சிம்ஹஸ்யவித்ராவ்யதாம்" என்ற வாக்கியத்திற்குத் தக்க அர்த்தம் செய்து துலுக்கர் விடுத்த அம்மெழுக்குச் சிம்மத்தை உருக்கிக் கப்பம் பெற்றுப் பின்னர் "அக்ரதக்ஷிணை போஜனத்துக்குச் சீட்டுக் கொடுக்கும் அதிகாரம் அடைந்தான்.

ஒருநாள் பன்னமத்தில் பாதி உயரமும் தோலொட்டி எலும்பு மேற்கண்ட கறுத்த விகாரமான உருவமும் உச்சிக்குடுமி

யும் ஒருநாளும் ஊத்தை விளக்கப்படாத பாசி படர்ந்த கோரைப் பல்லும், தலைமேல் ஆயிரம் போத்தலென்றால் அதற்கேதகும் என்னும் ஒரு சஞ்சியும், கையில் அநேக இடங்களில் மெழுகடைக்கப்பட்ட ஒரு ஸ்தாலியும் உடையவராய் ஒரு சோழிய தபஸ்வி சாணிக்க முனிவரா அவரை வணங்கித் தன்னை இரட்சித்தருள வேண்டுமெனப் பிரார்த்தித்து அக்கிர போஜனச் சீட்டைக் கொடுத்து இடஞ்சொல்லி அனுப்பினன்.

நவநந்தனர்களால் தள்ளப்பட்ட சாணிக்கியர் கோபித்து உங்கள் சிம்மாஸனத்தில் சந்திரகுப்தனை யமர்த்துகிறவரையில் இக்குடுமியைக் கட்டுவதில்லை என்று வெளியேவந்து சந்திரகுப்தன்மேல் ஸ்தாலிநீர் தெளித்துப்பட்டங்கட்டுவதாகக் கூறித்தமது 64-சீடர் 32-நேயர்களில் ஒருவனாகிய விஷ்ணு சர்மாவுக்குச் சொல்லிவிட்டுப் பர்வதகேச்சுவான் என்னும் அரசனிடம் போய் நட்புப் பெற்று விஷ்ணுசர்மாவுக்குத் (இந்துசர்மனென்பதுபிரதிபேதம்) தெரிவித்தார். இவன் க்ஷபண சந்யாசி வேஷம்பூண்டு ஜீவசித்தி என்னும் பெயர்தரித்து மந்திரத்தால் குசும புரத்தாருக்கு நோய் உண்டாக்கித் தீர்த்து வசியஞ் செய்து கொண்டு யுத்தம் நேரிடும் நேரிடும் என்று சொல்லிவந்தான்.

விஷ்ணுகுப்தர் என்னும் சாணிக்கர் ஒரு பௌர்ணமி தினம் இரவிய வேளையில் சேனைகளோடுவந்து குசுமபுரத்தை வளைத்துக்கொண்டார். நவநந்தனர் சேனை ஜீவசித்தி தந்திரத்தால் வாவில்லை. சாணிக்கர் கிழக்கு வாசலில் ராக்ஷஸன் மாண்டானென்று பொய்யாய்ப் பறைசாற்றுவித்தார். நவநந்தனர்பயந்து மேல்வாசற்புறம் வரப் பர்வதகேசுவரன் அவர்களைக் கொன்றான். ராக்ஷஸன் பயந்து கோட்டைக் கதவை யடைத்துக்கொண்டு ஜீவசித்தியால் விஷகன்னிகை யொன்றைச் சிருஷ்டித்துச் சந்திர குப்தனைக்கொல்ல ஏவிவிட்டுத் தான் சுரங்கத்தின் வழியாய்ச்சென்று மறைந்திருந்தான்.

சாணிக்கர் உபாயத்தால் விஷகன்னிகை பர்வத கேசுவரனை அழித்தாள். பத்ரபடன், பாகுராயணன் இவர்களால் பர்வதகேசுவரன் குமாரனாகிய மலையகேதுவும் அழிந்தனர். கல்லறுத்துவிட்டுச் சந்திரகுப்தனைக் கொல்ல நியமிக்கப்பட்ட

தாருவர்மாவின் அஜாக்கிரதையால் ஈட்டியால் சந்திரகுத்தனைக் கொல்ல இருந்த பற்கரன் கல்விழுந்து மாளத் தாருவர்மா கொட்டாப்புளியால் பர்வதகேசுவரன் தம்பி வைரோதகனைக் கொன்ற தன் நிமித்தம் ஜனங்களால் கொல்லப்பட்டான். சயனக் கிருகத்தில் கொல்ல ஒளித்திருந்த நூறுபேரையும், விஷங்கொடுக்க இருந்தவனையும், மற்றுஞ்சத்துருக்களையும், உபாயத்தால்வென்று சாணிக்கர் சந்திரகுத்தனுக்குப் பட்டங்கட்டித் தான் சிலகாலம் மந்திரியாக இருந்து தலையை முடித்துக்கொண்டு பின்னர்ப் பழைய ராக்ஷஸனையே மந்திரியாக்கிவிட்டுத் தவஞ் செய்யச் சென்றார்.

அவ்வாறு தபம் செய்யச்சென்ற பிரதானி சாணிக்கர் தம்பாபம் நீங்கக் காசியில் நாய் மாமிசத்தால் யாகம் செய்தார். அக்கினிவாருண தீர்த்தத்தில் தாமரையில் ஒளித்துக் கொண்ட போது இந்திரனும் பிரமனும் அவனைக் கண்டு அவனோடு ஆதிமூல லிங்க தரிசனஞ் செய்து சிவானந்தப் பெருவாழ்வு பெற்றனர். இம்மூவரும் இவ் வாதிமூலத்தை முன்பாடிப் புகழ்ந்த மூன்று வித்துவான்கள். இவர்கள் இந்திர லிங்கத்திற்கு மேற்கே அதாவது முத்துக்கிருஷ்ணபுரி குமாரக் கோட்டத்திற்கு மேல்திசையில் மூன்று லிங்கங்களை ஸ்தாபித்து வணங்கினவர்கள். இவ்விலிங்க மூர்த்திகளைப் பிரகார அர்த்த மகாமண்டப அக்கிரார பிரதிட்டையாவும் பொருந்தியதாய் நாளைக்கும் பழைய சின்னங்களையுடையதாய் நல்லூற்று நீரையும் பல்வகை வனப்பையும் உடையதாய் இவ்வாறு சிவலிங்க மூர்த்தியையும் இடிந்த கோயில்களையுமுடையதாய் பார்ப்பார் மனத்தைப் பரிதபிக்கச்செய்வதாய் முத்தைய பிள்ளை பேட்டை எனப் புதுப்பெயரில் வழங்குமிடத்திலும், சில அறிகுறிகளைமாத்திரம் காட்டுவனவாய் இதுபோது புறச்சமயத்தவர் வசமாயுள்ள ஓரிரண்டிடங்களிலும் தரிசிக்கலாம்.

அக்கினிபடிந்ததால் வருண தீர்த்தத்திற்கு ஆக்நேயதீர்த்தம் என்றும் பெயர். சாணிக்கர் தம் சீஷர்களோடு தன் நகரமாகிய வருணபுரி வந்து சுவாமி தரிசனம் செய்து சுவாமிக்கு வடபுறம் விநாயக மூர்த்தமாய் விளங்குகின்றனர். சந்திரகுத்தனே தன் கொடுமையாலும் கிரக பீடையாலும் தன் நாட்டில் பஞ்சம் நேர்ந்ததென்று வாமதேவரால் உணர்ந்து வருணஸ்தலத்

தில் வந்து சிவதரிசனம் நவக்கிரகபூஜை சனிப்பிரதிட்டை செய்து பிறகு படிவாலயார்சையரால் நவக்கிரகங்கள் பூஜித்த பெருமை முதலியன உணர்ந்து பாடலிபுர மன்னனைக்கண்டு தன் நாடுசென்று செழிக்க வாழ்ந்து பின்னர்த் துறவியாகி வருணைவந்து சிவலிங்கத்துக்கு வடபால் சமாதி நிட்டை யுற்றனன். அவன் பத்தினி நிம்மலை அவன் பக்கத்திற் கூடவே தொடர்ந்து வந்து நிட்டை கூடினள்.

இவர் பெருமையையும் க்ஷேத்திர வைபவத்தையும் உணர்ந்த லாடதேசத்து அரசன் இவ்விடம் வந்து அவர்களைத் தரிசித்துக் கொண்டிருப்பதால் அத்தபோவனம் இலாடவனம் எனப் பெயர் பெறும். அங்குப் பலசித்தர்கள் தவம் இழைக்கின்றனர். ஆதிமூல லிங்கத்தை வணங்கி யோகஞானங் கூடுவதற்கு இஃது ஏற்ற சார்பு. சகம் 1822 சார்வரி வருஷம் கார்த்திகைமீ திருக்கார்த்திகை நக்ஷத்திரத்தில் யோகமூர்த்தமாய்த் தோன்றி பல்லாயிர ஜனங்களுக்குக் காக்ஷிதந்தருளும் பெரியோர்களும் இவர்களே.

இவர்கள் சரித்திரத்தைச் சம்பூரணமாய் வடமொழியில் முத்திரா ராக்ஷஸம் டுண்டி கதைச்சுருக்கம், வாருணை மான்மியம் தமிழில் முத்திரா ராக்ஷஸம் சாணக்க தந்திரம், இங்கிலீஷில் ஹாரேஸ்ஹேமான் உவில்ஸன் என்ற ஹரிணைபண்டிதர் மொழி பெயர்ப்பு, மலையாளத்தில் சாணக்க சூத்திரம் இவற்றுள் காண்க.

பதினாறாவது — நைமிசமுனிவர் பேறுபெற்ற படலம்.

"திருவமிகுஞ் சிவமுனிவன் சிவபிரான் மான்மியத்தை
மருவவெளிப் படமன்பான் மாதவர்க்கங் குரைத்தபினர்
வெருவரிய வேட்டியினை வினைமுடிப்பச் சினவிடைமே
லுருவலிய பூரணியோ டெழுந்தனனம் புராதனனே.

இவ்வாறு சூதபுராணிகர் வாருணை மான்மியத்தைச் சொல்லக்கேட்டு நைமிசமுனிவர் களிப்படைந்து யாகம் முடித்

தனர். ஆதிமூலசுவாமியும் அங்குத்தோன்றி அவர்கள்யாகத்தை நிறைவேற்றித் தந்தனர். சூதபுராணிகரும் மகிழ்ச்சியோடு தம திருப்பிடஞ் சேர்ந்தனர். நைமிச முனிவர்களும் தாங்கள் விரும்பிய போதெல்லாம் வாருணஸ்தலமடைந்து பல தீர்த்தங்களிலும் ஸ்நானஞ்செய்து பல லிங்கங்களையும் தரிசித்துக் கூறிப்போந்த அம்மூன்று வித்துவான்களும் பூசித்த முத்தொத்த சுவேத வனத்திற்றவமிழைத்துக்கொண்டு பெருநன்மை பெற்று வருகின்றனர்.

இவ்வாறே இப்பூவுலகிலுள்ளவர்களும் செய்வாராகில் இஷ்டசித்திகளையும் நித்திய இன்பத்தையும் பெறுவர்.

இப்புராணம் எழுதிவைப்போர் வெளியிடுவோர் படிப்போர் கேட்போர் மனைவி மக்கள் பாக்கியம் பெற்றுச்சிவஞானச் செல்வராய் வாழ்வர்.

சீர்சான்ற வாருணத்துச் சிவபெருமான் புகழ்வாழி!
வார்சான்ற வாரமுத வல்லியருட் டிறம்வாழி!
பேர்சான்ற வடியவர்தம் பேரவைக டாம்வாழி!
கார்சான்ற வம்பலத்தெங் கண்ணுதலோன் பதம்வாழி.!

திருச்சிற்றம்பலம்.
வாருண மான்மிய வசனம் முற்றிற்று.
முத்தமிழ் விரகர் திருவடி வாழ்க.

உ

நைமிச முனிவர் துதிகவிகள்.

மாலோடு மலர்ப்பிரமன் வானவர்கோன் காண்பரிய
மேலோடு வாழ்வளிக்க விண்ணவர்க ளுவப்பெய்திப்
பாலோடு பழம்பிழிந்த படியென்ன வின்றமிழா
னுலோடு மறைகாணு நம்பனைநாத் தொழவுரைப்பார். 1

உலகெலாம் படைத்தான் றன்னை யுந்தியிற் படைத்தான் றன்னை
நலனுறு கடவுட் டேவை நான்மறை நிகம மேன்மைக்
குலமெமக் களித்தான் றன்னைக் குவலய வருணை மேவிப்
பலர்விழை நெறிதந் தானைப் பாவியேம் விடுகி லேமே. 2

விண்ணுலகு மண்ணுலகும் விரும்புமந்த வித்தகத்தை
நண்ணுலகத் தமர்த்திவைத்த நாதனமர்ந் துறையுமிடந்
தின்னெனவே தெங்கின்குடக் காய்கடுவன் னெறியத்
தண்கமுறுஞ் செங்கயல்பாய் தடவருணை மாநகரே. 3

செங்கைவேன் முருகனுந் தன்கைகீள் செல்வனுஞ்
சங்கைதி ரனுபவஞ் சார்தரத் துதித்தலாற்
செங்கனூர் மாசிலா மணியவன் றிருந்திட
மங்கனூர் பயில்பொழி லாலவாய் வருணையே. 4

வேதநன் னூலினன் வெண்ணிற் றன்சுடர்
நாதவ ணத்தின ஞடு நன்னக
ரோதம்வந் தொலிக்கவே யொதுங்குஞ் சங்கினந்
தாதம்வந் துண்ணுந்தன் சாமி வாருணம். 5

நட்டானை நான்கியலும் நட்டான் றன்னை
நட்டார்க ளுறக்களித்த நாதன் றன்னைப்
பட்டானைப் பதிபசுபா சத்தான் றன்னைப்
பட்டழிந்த முப்புரங்கள் பறித்தான் றன்னைத்
தொட்டானை வருணபுரித் துரியத் தானைத்
துரிசறுத்த பெரியானை தூய்நீற் றானை
முட்டானை முன்னகத்தார் முற்றி னானை
முழுமணியைக் கண்டடியே முன்னு மாறே. 6

வேதநன் னூலினன் போலும் வெண்ணகைச் செய்யவாய் நங்கை
காதல்கொள் கபாலியன் போலுங் காமனைக் கண்ணுதற் செற்ற
வாதவித் தவன்றவன் போலும் வளங்கெழு மாளிகை யோங்கச்
சீதங்கொள் வருணையன் போலும் சேமிசை நின்றபி ரானே. 7

காலைத் துயிலித்துக் கடவுள் பதம்பாடச்
சேலைத் துகில்தந்நான் தில்லை வாருணத்தான்
பாலைத் துயர்நீக்கிப் பண்ணந் தேர்ந்தான்றேர்
காலைக் கழல்சேரக் கழலும் வினைதாமே. 8

சொல்லாலும் பொருளாலுஞ் சுருதிவழி நெறியால
மெல்லாருந் தொழுதேத்த வேதொன்று முணராதேம்
வல்லாயுன் புகழ்கேட்க வாழ்வளித்தாய் மாயவனுங்
கோல்லேற்று விடைப்பாகா கோற்றவனே மங்களமால் 9

கவிக்கூற்று.

அண்டவன்மான் மியமதனை யருந்தமிழாற் றுதித்தபினர்ப்
பூண்டவக மகிழ்ச்சியினற் புளகமுற்று மெய்சிலிர்ப்பத்
தாண்டவமா டுவனென்னுந் தனிக்குறிப்பா லெற்தழுத்துத்
தாண்டவமா லெனுநாமந் தரிப்பித்தார் வாழியரால். 10

வாருணா மான்மிய வசனம்

தவறு திருத்தம்.

பக்கம்	வரி	தவறு.	திருத்தம்.
2	12	எனக்கு	எனக்குக்
3	32	யென்றனர்	என்றனர்
4	5	சிவலோக	பிரமலோக
,,	11	செப்பவர்	செய்பவர்
,,	25	சென்றயின்	சென்றபின்
7	22	யிரகாசிக்க	பிரகாசிக்க
15	18	போதிய	பொதிய
17	27	பெழுக்குச்	மெழுகுச்
19	23	இவ்வாறு	இலகும்
20	8	பெருமையயம்	பெருமையும்
22	3	னெறியத்	தானெறியத்

குறிப்பு:— குடமுழுக்கு விழா நெருங்கிய காலத்தில் இஃதச்சிடப்பெற்றதால் இத்திருத்தங்களுக்குமேலும் இருக்கலாம். பெரிதும் தயை செய்து திருத்தங்கொண்டருளுமாறு பிரார்த்திக்கிறேம். சுபம்.

அமிர்த விலாச
அச்சகம்
பரங்கிப் -
- பேட்டை,